1. தகவல் கோரல் (தொடர்ச்சி).

இ. நகராட்சி மன்றத் தேர்தல்கள் குறித்து.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டத்தைப் பற்றி நான் கேட்கவில்லை. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நகராட்சித் தேர்தல்கள் எப்ரலிலே நடைபெறும் என்று அறிவித்தார்கள். அப்ளிகேஷன் போட்டிருக்கிறார்கள். இப்போது, ஜூன், ஜூலை மாதங்களில் நடக்கும் என்று சொல்லுகிறார்கள். எது உண்மை என்று தெரிவித்தால், வேலை செய்வதை நிறுத்தி வைக்கலாம்.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு காளிமுத்து, ஏற்கனவே, உள்ளாட்சிகளுக்கு ஏப்ரல் மாதம் தேர்தல் நடைபெறும் என்று சொன்னார். ஆனால், இப்போது காரைக்காலிலே போய், அது ஜூன், ஜூலைக்குப் போகும் என்று சொல்லியிருக்கிறார். இன்னும் ஒரு படி மேலே போய் சொன்னார், ஏப்ரல் மாதம் முதல் தேதி, இந்தச் சென்னை மாநகர மேயர் பதவி ஏற்பார் என்று. ஏப்ரல் முதல் தேதி என்ன என்று தெரியும். அப்படித் தான் மக்களைப் பண்ணப் பார்த்தாரா என்று தெரியவில்லை. அப்படியென்றால், தேர்தல் ஏப்ரலில் நடைபெறுமா? ஜூன், ஜூலைக்குப் போகுமா என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும்.

இரண்டாவது, சபை நடக்கும்போது ஏப்ரலில் நடக்கும் என்று சொல்லிவிட்டு, காரைக்காலில் உட்கார்ந்து, பாண்டிச்சேரி மண்ணுக்குப் போன உடனே மனம் மாறி அது ஜூன், ஜூலைக்குப் போகும் என்று சொல்வது நியாயமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்னது அமைச்சர் அவர்களின் காதில் விழுந்தது. பதில் சொல்வதும், சொல்லாததும் அவர் விருப்பம். உட்காருங்கள்.

5. அறிக்கை அளித்தல்

அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்பெறும் பஞ்சப்படி உயர்வு குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி தமிழக அரசு அறிவித்த ஊதிய விகிதங்கள் சராசரி வாழ்க்கைச் செலவுப் புள்ளி 320 என்ற அடிப்படையில் அமையப் பெற்றன என்பதை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். இச் சராசரி 8 புள்ளிகள்

[1980 பிப்ரவரி 12

அதிகரிக்கும்போது ஒரு தவணை அகவிலைப்படி அளிக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை. இதன்படி சராசரி புள்ளி 328, 336 என்ற நிலைகளை எட்டியபோது அரசு இரண்டு தவணைகள் அகவிலைப்படி அளித்தது. இப்போது சராசரி புள்ளி 344ஐத் தாண்டியபடியால் அடுத்த தவணை அகவிலைப் படி அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. இது இந்த (பிப்ரவரி) மாதத்திலிருந்து அமுலுக்கு வரும். அதாவது 1—3—1980 அன்று வழங்கப்படும். இது அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், உள் ளாட்சி நிறுவன ஊழியர்கள் ஆகியோருக்கும் பொருந்தும். இதன் விளைவாக தற்போதுள்ள ரூ. 13 குறைந்த அளவு அக விலைப்படி ரூ. 19 ஆக உயர்த்தப்படும். உயர்ந்த அளவு அக விலைப்படி ரூ. 60 லிருந்து ரூ. 90 ஆக உயர்த்தப்படும். இதற்காக ஆண்டுச் செலவு ரூ. 12 கோடி ஆகும்.

இதற்கு ஏற்றவாறு ஓய்வு ஊதியம் பெறுபவர்கட்கும் தக்க அகவிலைப்படி உயர்வு அளிக்கப்படும்.

கல்லூரி ஆசிரியர்கள் விடுத்துள்ள கோரிக்கைகள் பற்றி அரசு நன்கு ஆராய்ந்தது. ஆசிரியர்களின் பிரதிநிதிகளுடன் கல்வி அமைச்சரும், கல்வித்துறைச் செயலாளரும் விரிவாக பேச்சு வார்த்தைகள் நடத்தினர். ஆசிரியர்களின் 21 கோரிக்கைகளில், 18 கோரிக்கைகள் பற்றி அரசு ஏற்கனவே ஆணைகள் வெளி யிட்டு விட்டது. அவர்களின் முக்கிய கோரிக்கைகளுள் ஒன்று அரசு ஊழியர்களைப் போலவே குறிப்பிட்ட ஆண்டுகள் பணி செய்த உதவிப் பேராசிரியர்கள் (Assistant Professors) பேராசிரியர் களாகப் (Professors) பதவி உயர்வுப் பெறவேண்டும் என்பதே. இதை அரசு ஏற்று 10 ஆண்டுக் காலம் உதவிப் பேராசிரியர் களாகப் பணி புரிந்தவர்கள் 1—4—1980லிருந்து பேராசிரியர் களாகப் பதவி உயர்த்தப்பட வேண்டும் என்று முடிவு செய்துள்ளது. பல பாடங்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களின் பதவி உயர்வு வாய்ப்புகளில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைச் சரிப் படுத்தும் வகையில், இனிமேல் 10 ஆண்டுகள் பணி செய்தவர்கள் மட்டுமே பதவி உயர்த்தப்படுவார்கள் என்றும் அரசு முடிவு செய்துள்ளது. இந்த நல்ல முடிவுகளை ஆசிரியப் பெருமக்கள் வரவேற்றுத் தங்கள் கிளர்ச்சியினைத் திரும்பப் பெறவேண்டும் என்று அவர்களை அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு அமைச்சர் அவர்களிடம் சில கேள்வி களை எழுப்ப விரும்புகிறேன். ஏற்கனவே இந்த அரசு ஆசிரியர் களைப் பற்றி இந்த மன்றத்திலே........

[நண்பகல் 12.00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 106-ன் கீழ் அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை சமர்ப்பித்த பிறகு, அதன்மீது எந்த விவாதமும் இல்லை, விளக்கமும் கேட்கக்கூடாது. ஆனால், யார்

1980 பிப்ரவரி 12] [திரு. கி. மனோகரன்]

யார் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு வந்திருக்கின்ற தொகுதியிலுள்ள மக்கள் தெரிந்துகொள் வதற்காக நான் படிக்கிறேன். இந்தப் பிரச்சினை பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்தவர்கள் : திருவாளர்கள் சி. கோவிந்தராஜன், கு. ரமணி, ஆர்.உமாநாத், ஆர்.கிருஷ்ணன், பி.ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், எம்.ஏ.லத்தீப், கோ. இளங் கோவன், சோ. அழகர்சாமி, செ.சிவசாமி, பொ.உத்திராபதி, மா.மணிமாறன், ஜே. ஜேம்ஸ், ரா.மார்க்கபந்து, அ. ரகுமான் கான், டி. பி. எம். பெரியசாமி, இராமலிங்கம் ஆகியோர் ஆவர்.

திரு. அ.ரகுமான்கான்: பாயிண்ட் ஆப் ஆர்டர், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கையில் ஒரு தவறான தகவல் சபையில் தரப்பட்டிருக்கிறது. ஏற்கனவே கோரிக்கை ஒப்புக் கொள்ளப்பட்டது. அதுவல்ல பிரச்சினை. அவற்றை அமல்படுத்துவதில்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் இப்படிப் பேச முனைந்தால் மறுபடியும் நீக்கவேண்டி வரும். தவறான தகவல் என்றால் விதிகளைக் குறிப்பிட்டு எழுத்து மூலம் தர வேண்டும். 106–வது விதியின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கை யின் மேல் எதையும் பேசக் கூடாது.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நீங்கள் சொன்ன விதியின்கீழ் ஸ்டேட்மென்ட் கொடுத்தால் கேள்வி கேட்க முடியாது என்பது உண்மை. ஆனால் ஒரு சிக்கலான நிலைமை. இன்றைக்குக் கடைசி நாள். உங்களிடத்திலே ஒரு அப்பீலாகக் கேட்கிறேன்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று கடைசி நாள் என்று முற்றுப்புள்ளி வைத்துப் பேசாதீர்கள். கடைசி நாளா என்பதைப் பின்னால் தெரிவிக்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: உங்களுடைய ரூலிங்குக்குக் கட்டுப் பட்டே சொல்லுகிறேன். அட்ஜார்ன்மென்ட் மோஷன் எடுத்துக் கொள்ளப்படாத நிலையில் தெளிவு கிடைக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கும் போது நீங்களும், அவை முன்னவர் அவர்களும் எல்லோரும் ஒத்துக்கொண்டு சில கிளாரிபிகேஷன் கேட்க அனுமதிக்க வேண்டும். எக்சப்ஷனல் கேஸ் என்ற நிலைமையில் அட்ஜார்ன்மென்ட் மோஷன் அனுமதிக்கப்படாத நிலையில் நீங்கள் சில கிளாரிபிகேஷன் கேட்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: இரண்டே இரண்டு கேள்விகள் தங்கள் அனுமதியோடு கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 106 வது விதியின்கீழ் அனுமதி இல்லையென்று சொன்னேன். மீண்டும் மீண்டும் அனு மதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருப்பது சரியல்ல.